**செய்தி வெளியீடு எண்: 670** **நாள்:01.10.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளாமலேயே இசைவாணையப் புதுப்பிக்கும் முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஏற்கனவே ஒரு முறை இசைவாணை புதுப்பிக்கப்பட்ட அனைத்து ஆரஞ்சு மற்றும் பச்சை வகை மற்றும் சிறிய வகை சிவப்பு தொழிற்சாலைகளுக்கு பொருந்தக்கூடியதாகும் தானாகவே இசைவாணை புதுப்பிக்கும் முறைக்கு தகுதியான தொழிற்சாலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ( www.tnpcb.gov.in/ www.tnocmms.nic.in என்ற இணையத்தளத்தில் கிடைக்கும்) சுய சான்றுடன் ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். அதிகரிக்கப்பட்ட உற்பத்தி பொருட்கள்/மாற்றியமைக்கப்பட்ட கழிவுநீர் வெளியேற்றம்/அதிகரிக்கப்பட்ட அன்றாட மற்றும் தொழிற்சாலை கழிவுநீர் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை உடைய தொழிற்சாலைகளுக்கு தானாகவே புதுப்பிக்கும் முறை பொருந்தாது. அவர்கள் புதிய இசைவாணைக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள வேண்டும். தானாகவே இசைவாணை புதுப்பிக்க உரிய அடிப்படை விதிகளை கடைப்பிடித்து தகுதியான நிலையில் உள்ள தொழிற்சாலைகள் இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**